RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21319

# கள்ளிக்காட்டு இதிகாசம் புதினத்தில் முதன்மை மாந்தர்

இரா. உமாதேவி [அ, *], கோ. இரவிச்சந்திரன் [அ]

[அ] தமிழ்த்துறை, கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), திருச்செங்கோடு - 637215, தமிழ்நாடு, இந்தியா

# The Main Character in the Novel Kallikattu Ithihasam

R. Umadevi [a, *], G. Ravichandran [a]

[a] Department of Tamil, K.S.Rangasamy College of Arts and Science (Autonomous), Tiruchengode-637215, Tamil Nadu, India

* Corresponding Author: umadevir@gmail.com

Received: 18-05-2021
Revised: 03-07-2021
Accepted: 19-07-2021
Published: 26-07-2021

Check for updates

## ABSTRACT

The work of the narrator plays a major role in the success of the novel and easily matures the readers. It is the work of the narrator that relates to human life, echoes life, and becomes the container through which events unfold. Vairamuthu has fictionalized the story in his stories, thus making it believable that the actions of the characters have actually taken place. The narrator has shown in advance the location, time, environment, etc. of the events of the story. He has created the people he encountered in his contemporary life as characters in his stories. He has captured the images of his mantras through their physical appearance, characteristics, and speech. Therefore, it is an essential objective of this article to examine the characteristics of the main narrator in his novel Kallikattu Itigasam.

**Keywords:** Vairamuthu, Kallikattu Itigasam, Narrator, Characters

## முன்னுரை

ஒரு பொருளின் தோற்றத்தை மிகவும் அழகாக அறிவிப்பது வருணனை ஆகும். கவிதையையோ, கதை மந்தரின் படைப்பு நாவலின் வெற்றியில் முக்கிய பங்கு வகிக்கிறது மற்றும் வாசகர்களை எளிதில் முதிர்ச்சியடையச் செய்கிறது. கதை மந்தரின் படைப்புதான் மனித வாழ்க்கையுடன் தொடர்புடையது, வாழ்க்கையை எதிரொலிக்கிறது, மேலும் நிகழ்வுகள் வெளிப்படும் கொள்கலனாக மாறுகிறது. வைரமுத்து தனது கதைகளில் கதையை கற்பனையாக்கியுள்ளார், இதனால் கதாபாத்திரங்களின் செயல்கள் உண்மையில் நடந்துள்ளன என்பதை நம்ப வைக்கிறார். கதை சொல்பவர் கதையின் நிகழ்வுகளின் இருப்பிடம், நேரம், சூழல் போன்றவற்றை முன்கூட்டியே காட்டியுள்ளார். அவர் தனது சமகால வாழ்க்கையில் கண்ட மக்களை தனது கதைகளில் கதாபாத்திரங்களாக உருவாக்கியுள்ளார். அவர் தனது மந்திரங்களின் உருவங்களை அவர்களின் உடல் தோற்றம், பண்புகள் மற்றும் பேச்சு மூலம் படம்பிடித்துள்ளார். எனவே, தனது கல்லிக்காட்டு இதிகாசம் புதினத்தில் முக்கிய கதைசொல்லியின் பண்புகளை ஆராய்வது இந்தக் கட்டுரையின் இன்றியமையாத நோக்கமாகும்.

## கதை மாந்தர் படைப்பு

புதினவிலக்கியத்தின் வெற்றியில் பெரும்பங்கு வகிப்பதும் படிப்போரை எளிதில் தன் வயப்படுத்துவதும் கதை மாந்தர் படைப்பே ஆகும். மனித வாழ்வோடு தொடர்புடையனவாகவும்,

வாழ்க்கையை எதிரொலிப்பதாகவும், நிகழ்ச்சிகளை வெளிகாட்டும் கொள்கலன்களாகவும் அமைவது கதை மாந்தர் படைப்பே ஆகும்.

வைரமுத்து தமது கதைகளில் பாத்திரங்களின் செயல்கள் உண்மையில் நிகழ்ந்திருக்கும் என்ற நம்பகத்தன்மை ஏற்படுமாறு கதை புனைந்துள்ளார். கதை நிகழ்வுக்கேற்ற இடம், காலம், சூழல் போன்றவற்றினைக் கதைப்படிப்பவன் முன்னே நிறுத்திக்காட்டியுள்ளார். தமது சமகால வாழ்வில் கண்ட மக்களையே தம் கதைகளில் மாந்தர்களாகப் படைத்துள்ளார். அவர்களின் உடலமைப்புத் தோற்றம், பண்புகள் மற்றும் அவர்தம் பேச்சுகள் மூலம் தமது மாந்தர்களைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அதனால் அவரது கள்ளிக்காட்டு இதிகாசம் புதினத்தில் முதன்மை கதைமாந்தரின் பண்பு இயல்புகளை ஆய்வது இக்கட்டுரையின் இன்றியமையாத குறிக்கோளாகும்.

“எத்துணைச் சிறந்த கலைஞனாயினும் பாத்திரப் படைப்பின் பொழுது, அவனுக்கு வேண்டிய இன்றியமையாச் சாதனங்கள் ஒன்று உலக அனுபவம். சூழ்நிலையைப் பற்றிய முழு அறிவும் அவனுக்கு வேண்டும்” (வரதராசன்.மு,2000) என்று மு.வரதராசன் கூறுவது எண்ணத்தக்கது.

கதை இலக்கியத்தில் கதைக் கருவுக்கு முதன்மை இடம் தந்தாலும் அதன் சிறப்பு படிப்போர் மனதிலும் பதிய வேண்டுமானால் கதை மாந்தர் படைப்பிற்கும் கதைக்கருவிற்கு இணையான இடம் பெற வேண்டும்.

“எழுத்தாளர், அவருடைய மாந்தர்களிலிருந்தே தன் பணியைத் தொடங்குகின்றார். தம் மனதளவில் ஒரே மாதிரி சிறப்பாகவே ஆசிரியர் கருத்தை உணர்த்தப் பயன்படும் பல கதைக் கோப்புகள், ஒன்றி அம்மாந்தர்களைச் செயல் படுத்தத் தொடக்குகிறார்.” (பிரதிபா இராஜ கோபாலன்,2000)

என்று திறனாய்வாளர் கூறுவதிலிருந்து புனை கதை இலக்கியப் படைப்பாளர்களின் கருத்து மிகவும் அதிகமாகக் கவர்வதும் பாதிப்பதும் கதைமாந்தர்களே வலிவு பெறுகிறது என்பது திண்ணம்.

## கதைமாந்தர்கள் படைக்கும் முறை

புனை இலக்கியங்களில் ஓரிரு மாந்தர்களைக் கொண்டே எழுதப்படுகின்றன. கதை மாந்தர்களே படிப்பவரின் மனதைப் பெரிதும் ஈர்ப்பவராவர். கதையில் கதை மாந்தரின் படைப்பு சுவையுடையதாக அமைய ஒவ்வொரு கதைமாந்தருக்கும் தனி இயல்புடையதாக அமைப்பது மிக நுட்பமான கலையாகும்.

கதை மாந்தர்கள் பண்பை மையமாகக் கொண்ட கதைகளில் பாத்திரங்களைப் பற்றிய செய்திகளை வெளியிட்டு வளர்த்திக் காட்ட முடியும். மற்றவற்றில் கதை மாந்தரது கதைக்கருவின் வெளிப்பாட்டிற்குத் தேவையான அளவில் மட்டுமே படைத்துக் காட்டப் பட வேண்டும்.

“பாத்திரப்படைப்பு என்ற நிலையில் பார்க்கின்ற பொது நடப்பியல் வண்ணம் ஒளிவீசுகிறது. பாத்திரத்தின் செயல்கள், சிந்தனை, மனக்குழப்பம், தீடீரென ஏற்படும் ஒருவகைத் தெளிவு இவையனைத்தும் எந்த விதமான தடைகளும் இல்லாமல் சித்தரிக்கப்படுகின்றன.” (திருமலை.ம,1997)

என்று திருமலை கதைமாந்தர் படைப்பிற்கு நடப்பியல் முறை மிக முக்கியமானது என்று கூறுவது ஈண்டு எண்ணத்தக்கது.

## பாத்திரப் படைப்பு நிலை

இலக்கியம் என்பது மனித பட்டறிவின் வெளிப்பாடு. இலக்கியத்திற்குள் இலக்கணம் என்பது தமிழ் இலக்கிய வரலாற்றுக் கொள்கை. இருப்பினும் இலக்கணத்தை மனதிற்கொண்டு யாரும்

இலக்கியம் படைப்பது இன்றளவும் இல்லை. அதனைப் போன்று புதினவிலக்கியங்களில் பாத்திரப் படைப்பிற்கு என்று கோட்பாடுகள் எதுவும் இருந்ததாக எண்ணவோ கூறவோ முடியாது.

பொதுவாகக் கதை மாந்தர்கள் சூழலினை உருவாக்கம் பொழுது கதையினுடைய ஆழக் கருத்துக் கூர்மையாக வெளிக்காட்டவே படைக்கப்படுகின்றனர். சமூகத்தில் குறிப்பிடத்தக்க எதாவதொரு வகையில் இயங்கும் மக்கள் படைப்பாளர்களின் மனதில் சலனத்தை ஏற்படுத்துவர். அச்சலனத்தின் தீர்வாகவே புதினங்கள் படைப்படுகின்றன.

## பாத்திரத்தின் தன்மை

எழுத்தாளன் தான் கூறவந்த கருத்துக்களைக் கதையின் வழியே வெளிக்காட்டுகிறான். அவ்வாறு சிறப்புற வெளிப்படுத்த அக்கதையில் பாத்திரங்கள் சிறப்பாக அமைய வேண்டும். அவை கதைப்பின்னலுடன் இயல்பாகப் பொருந்தி வருதல் வேண்டும். பாத்திரங்களின் தன்மையும் அதன் வளர்ச்சியும் முழுமைபெற்று சிறப்பாக அமைந்தால் தான் அக்கதையும் சிறந்தமையும்.

“கதை திட்டத்தை எலும்புக்கூடு என்றால் அக்கூட்டுக்கு உயிரையும் பொருளையும் பொலிவையும் தருவது பாத்திரமே யாகும்” (பிச்சமுத்து.ந,2002)

என்கிறார் ந.பிச்சமுத்து. புனைக்கதைகளில் எந்தவொரு பாத்திரம் மையமாகக் கொண்டு பின்னப்படுகிறதோ அந்தப் பாத்திரமே அதில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. மற்ற பாத்திரங்கள் அப்பாத்திரங்களுக்கு துணை நிற்கின்றன. கதையை ஒரு நீரோட்டமாக நகர்த்திச் செல்ல துணை அவசியம் என்பதால் இதரப்பாத்திரங்கள் படைக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

“புனைக்கதை மனிதன் தாமாக இல்லாவிட்டாலும் அல்லது நம் போல் இல்லாவிட்டாலும் நமக்கு வழிகாட்டியாக இருக்கும் வகையில், ஒரு ஆதி மனிதன் என்ற கருத்து அவனது இறுதி நிலையைக் கொண்டு நம் உணர்வில் வழி செய்யும்படியாக புனைக்கதை மாந்தர்கள் படைக்கப்பட வேண்டும்.” (Dhandayutham, 1977)

என்று தண்டாயுதம் கூறுவது மனங்கொள்ளத்தக்கது. அறிஞர்களின் கருத்துப்படி கதைப்படிப்பவர்களின் மனதில் ஏதேனும் ஒரு சலனத்தை ஏற்படுத்தும் தன்மையில் பாத்திரங்கள் அமைய வேண்டும். அத்தோடு பலவிதமான பண்புநலன்களைக் கொண்ட்தகவும் படைப்பாளன் கூறும் நிகழ்ச்சிக்கு உயிரோட்டத்தையும் உணர்வையும் கொடுக்க கூடியனவாகவும் பாத்திரங்கள் அமையவேண்டும் என்பது புலனாகிறது.

## பாத்திரங்களைத் தெரிவு செய்தல்

புனைகதை படைக்கும் போது பாத்திரங்களைத் தெரிவு செய்வதும் இன்றியமையாத திறனாகும். கதைக்களத்திற்கு ஏற்ற பாத்திரங்களே படைக்கப்பட வேண்டும். கதைக்கருவிற்கு பொருத்தமில்லாத பெயரையோ பண்புடையவற்றையோ தெரிவு செய்துவிட்டால் கதைக்களத்திற்கு ஏற்றனவாக அமையாது. அதனால், கதைக்கருவிற்கு ஏற்பவும் கதைக்களத்திற்கு தக்கவாறும் மாந்தர்களைத் தெரிவு செய்வது படைப்பாளனின் தலையாயப் பணியாகும்.

“பாத்திரங்கள் நம்மைப்போல் எலும்பும் தோலும் இரத்தமும் கொண்டு இவ்வுலகில் உலாவும் மனிதர்களாக அமைய வேண்டும்” (ஞானசம்பந்தம்.அ.ச,2016)

என்று அ.ச.ஞானசம்பந்தம் கூறுவது ஈண்டு எண்ணத்தக்கது. பொதுவாகப் புனைக்கதைப் படைப்பாளர்கள் தமது வாழ்வில் கண்ட மனிதர்களையே மாந்தர்களாகப் பயன்படுத்துவர். அதன் வழியில் வைரமுத்துவும் நடைமுறை வாழ்வில் கண்டவர்களையே கதைமாந்தர்களாத் தெரிவுசெய்துள்ளார். தம் கதை மாந்தர்களின் நிகழ்வினை கற்பனை கூட்டியும், குறைத்தும் வெளிக்காட்டியுள்ளார். இனம், தொழில், பண்பு, வயது, பட்டறிவு அடிப்படையில் பாத்திங்களைத் தெரிவு செய்துள்ளார்.

## பாத்திரப் படைப்பாக்க உத்திகள்

கதை மாந்தர்களைப் படைப்பதற்குக் கையாளப்படும் ஒருசில உத்திமுறைகளையே பாத்திரப் படைப்பாக்க உத்திமுறைகள் என்று அழைப்பர். படைப்பாளன் என்பவன் வெறும் கற்பனை மட்டுமே கலந்து தருபவன் அல்லன். அவன் சமூக வாழ்வோடும் அவற்றின் செய்கைகளோடும் தொடர்பு கொண்டவனாக இருக்கிறான். அதனால் மனித வாழ்வின் நிகழ்வு பட்டறிவுகளை படைப்பில் ஒரு கோர்வையாக வெளிப்படுத்துகிறான். தாம் வெளிப்படுத்த நினைக்கும் கருத்தை பாத்திரங்கள் வழியே உலவ விடுகிறான். மாந்தர் படைப்பிற்குச் சில உத்திகளைக் கையாளுகிறான்.

பாத்திரப் படைப்பாக்க உத்திகளைப் பின்வருமாறு பகுக்கலாம் என்கிறார் கரு. முத்தையா,

1. "பாத்திர எண்ணிக்கை
2. பாத்திர முன்மாதிரி
3. பாத்திரப்பெயர்
4. பாத்திர அறிமுகம்
5. பாத்திர வளர்ச்சி
6. பாத்திர முடிவு" (முத்தையா.கரு,1980)

பாத்திரப் படைப்பாக்க உத்திகள் பலவகைப்பட்டனவாக இருந்தாலும் மேற்கண்ட ஒருசில உத்திகளின் அடைப்படையிலேயே புனைவு இலக்கியங்கள் சிறப்புற அமையும் என்று சிந்திக்கத்தக்கது.

## கதைப்பாத்திரப் பெயர்கள்

புதினப் படைப்பிற்குக் கதைமாந்தர்கள் எவ்வளவு முக்கியமோ அதனைப் போன்றே கதை மாந்தர்களுக்குப் பெயரும் மிக அவசியமாகும். கதை மாந்தர்களின் பெயர்கள் புதையல் போன்றது. அதனை கூர்ந்து நோக்கின் பண்பு நலன் வெளிப்படும். எனவே பாத்திரங்களுக்குப் பெயர் சூட்டுவதில் கதையாசிரியர் பெரிதும் அக்கறை காட்டுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

"கதை மாந்தர் என் உள்ளத்தில் பிறந்து வளர்கிறார்கள். அவர்களுக்குப் பெயர் வைக்கும் பொறுப்பு எனக்கு ஏற்படும்போது அவரவர்களின் பண்புகள் உள்ளத்தில் நின்று தூண்டுதல் புரிகின்றன. அதனால், அப்படிப் பெயர் அமைத்து விடுதல் உண்டு" (பாக்கியமுத்து. தி, 2002)

என்று மு. வரதராசனார் குறிப்பிடுவது போன்று வைரமுத்துவும் கதைகளுக்குத் தகுந்த பாத்திரமும் பாத்திரப் பெயர்களும் இடம்பெறச் செய்துள்ளார்.

## பாத்திர அறிமுகம்

பாத்திர அறிமுகம் மிகுந்த கலைநுட்பத்தோடு செய்யப்பட வேண்டிய மிகச் சிறந்த பணி என்பர். பாத்திரப் படைப்பில் கதைமாந்தர் அறிமுகம் தனிச் சிறப்புடன் இருக்க வேண்டும். கதை படிப்பவனுக்குப் பொருத்தமான சூழ்நிலையை ஏற்படுத்தி அறிந்துகொள்ளச் செய்யும் கட்டாயமே பாத்திர அறிமுகம் எனக் கருதுவர்.

மாந்தர்கள் அறிமுகம் செய்யும் முறையை,

1. "பாத்திரத்தை நேரடியாக ஒரு நிகழ்ச்சியில் பங்கேங்பது போல அறிமுகப்படுத்துதல்
2. ஒரு பாத்திரத்தைப் பற்றிய செய்தியை ஆசிரியர் தம் கூற்றாகவே பிற பாத்திரங்கள் வாயிலாகவோ படிப்போர்க்குச் சொல்லிவிட்டு அதற்குச் சில பல காட்சிகளுக்குப் பினால் அப்பாத்திரத்தை அறிமுகப்படுத்துதல்

3. ஒரு பாத்திரத்தைப் பெயர் சுட்டாமல் கதையில் ஓரிடத்தில் நேரடியாகப் பங்கேற்கச் செய்தல், இரண்டாவது முறையோ, மூன்றாவது முறையோ கதையில் இடம் பெறுவது போல அப்பாத்திரத்தின் பெயர், பிற பாத்திரங்களுக்கும் அதற்குமுள்ள தொடர்பு போன்றவற்றைக் கூறுவர்" (சம்பத்குமார்,ப,1988)

என்று மூன்று நிலைகளில் பாத்திரத்தை அறிமுகப்படுத்தலாம் என்கிறார் பா. சம்பத்குமார். வைரமுத்து புதினங்களில் இம்மூன்று நிலைகளையும் காண முடிகிறது.

## பாத்திர வளர்ச்சி

புதினவிலக்கியப் படைப்பாளர்கள் தம் கதைகளில் வரும் மாந்தர்களின் தோற்றம், செயல், எண்ணம், பேச்சு, நடத்தை, பண்பு, வயது போன்றவைகளை முறையாக எடுத்துக் கூறுவர். கதை நிகழ பாத்திரம் அடையும் வளர்ச்சியே பாத்திர வளர்ச்சி எனக் கருதலாம்.

பாத்திர வளர்ச்சியை அறிய சமுதாயத்தோடு போராடுதல், தன்னுள் போராடுதல், குடும்பத்துடன் போராடுதல் ஆகிய கூறுகள் துணை நிற்பன. கதைப் படிப்பவனுக்குப் பாத்திரங்களின் பண்பினை அறியச் செய்யும் வகையில் கதை வரைந்துள்ளார் வைரமுத்து,

“முழுமைப் பாத்திரங்கள் - கதையின் தொடக்கத்தில் பாத்திரம் அறிமுகமான நிலையினின்றும் கதையின் முடிவில் ஏதேனும் ஒரு வகையில் வளர்ச்சி அல்லது மாற்றம் ஏற்பட்டால் அதை முழுமையாக கருதுவன்" (கீதா.கோ.வெ,1979)

என்று திறனாய்வாளர் கூறும் கூற்று அரணாகியது.

## வைரமுத்துவின் கதை மாந்தர்கள்

### முதன்மை மாந்தர்கள்

கதையின் பெரும்பான்மையான இடத்தைப் பெறக்கூடிய நிகழ்ச்சிகள், கருத்து நிலைகள் முதலியவற்றின் இன்றியமையாத இடத்தைப்பெறக்கூடிய தன்மைகள் பொருந்திய மாந்தர்களை முதன்மை மாந்தர்கள் எனப்படுவார்கள்.

“கதைக்கருவிற்கு இம்மாந்தர்களே விளக்கம் தரும். கதை நிகழ்ச்சிகள் இப்பாத்திரங்களைச் சுற்றியே அமையும். கதையின் முடிவு இம்மாந்தர்களைப் பற்றியதாக அமையும். படிப்போர் உள்ளத்தில் ஆழ்ந்த விளைவை ஏற்படுத்தும்.” (சம்பத்குமார்,ப,1988) என்று தலைமை மாந்தர்களின் தன்மையை விளக்குகிறார் பா. சம்பத்குமார்.

## கள்ளிக்காட்டு இதிகாசம்

### பேயத்தேவர்

கள்ளிக்காட்டு இதிகாசம் என்ற புதினத்தில் வரும் பேயத்தேவர் முதன்மைப்பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளார். பிறப்பு முதல் இறப்பு வரை துன்பங்கள் மட்டுமே அனுபவித்த பெரிய மனிதர். வாலிப வயதில் இவரது காதல் நிறைவேறாமல் போகிறது. காதலித்த பெண் கைம்பெண் ஆகியதைக் கண்டு மனம் வேதனை கொள்கிறார். மனைவியின் ஒப்புதலோடு தன் இல்லத்திற்கு அழைத்து வந்து வாழ வழி செய்கிறார். பெற்றெடுத்த பிள்ளைகள் தொடர்ந்து துன்பத்தை மட்டுமே தருகின்றனர். நடுத்தர வயதிலும் மண் மீதும் விவசாயத்தின் மீதும் பேரன்பு கொண்டவராக கதை முழுமைக்கும் வருகிறார்.

“கண்ணுக்கெட்டிய தூரம் வரை கானல் அலைகள். கதகதவென்று காய்ந்து கொண்டிருந்த அந்த முன் கோடை மாதத்தில் வெயிலை நிலா வெளிச்சமாய் கருதி உழுது கொண்டிருந்தார்கள் இரண்டு ஏர்க்காரர்கள். முன்னேர்க்காரர் பேயத்தேவர் : தத்தா, பின்னேர்க்காரன் : மொக்கராசு -

பேரன். பேயத்தேவர் நல்ல உயரம். முண்டாசையும் சேர்த்தால் ஆறடி சொச்சம். வேர்வையைப் போலவே வயதையும் வழித்தெறிந்துவிட்ட உடம்பு. மீசைபோல் புருவக் கட்டு. கம்பளி கத்தரித்த மாதரி புருவக்கட்டு. நெற்றி மேட்டிலிருந்து பள்ளம் பறித்து ஆழத்தில் மின்னும் பிரகாசமான கண்கள்.

சில நேரங்களில் அவர் தனக்குத்தானே பேசிக்கொள்வது மாடுகளோடு பேசுவது போலவும், மாடுகளோடு பேசுவது தனக்குத்தானே பேசிக்கொள்வது போலவும் தோற்ற மாற்றம் நேரும். அவரோடு பழகி அந்த ஞானம் பெற்றலொழிய அதைப் புரிந்து கொள்வது கடினம்" (வைரமுத்து,2005)

என்று பாத்திரத்தின் பண்புகளை விளக்குகிறார் ஆசிரியர். ஐந்து அறிவு உயிர்களிடம் பாசம் கொண்ட பேயத்தேவர் நட்பிலும் நன்றி மறவாதவர். தன் மனைவி அழகம்மாள் இழப்பும் மகனின் மனிதநேயமற்ற செயலையும் தாங்கிக் கொள்ள முடியதவராக ஒரு கட்டத்தில் நிற்கிறார். பரம்பரை பரம்பரையாக உள்ள விவசாய நிலத்தை அணை கட்டுவதற்காக அரசாங்கம் எடுத்துக் கொள்வதை நினைத்து மிகுந்த மனவேதனை கொள்கிறார். வயதான காலத்திலும் வேதனைகளையும் சோதனைகளையும் சமளித்த பேயத்தேவர் வாழ்ந்த மண் நம்மை விட்டுப் போகிறதே என உள்ளம் குமுறுகிறார். கள்ளிப்பட்டி கிராம்மே ஊரை விட்டு வெளியில் செல்லும் நிலை கண்டு தாமும் செல்ல முடிவெடுக்கிறார். இறுதியில் வாழ்ந்த மண்ணை விட்டு மனமின்றி ஆற்று வெளத்தில் மண்ணுக்கு இரையாகிறார். இதனை,

“ஒரு மகா மனுசனக் கொண்டுபுட்டமேன்னு ஒரு நிமசம் கூட மவுனம் காக்காம அதுபாட்டுக்கு போயிக்கிட்டேயிருந்துச்ச அல இன்னைக்கும் வைகை அணை மேல அடிக்கிற வருச நாட்டுக் கத்துக்கு மட்டும் ஒப்புச் சொல்லி அழுது போகுது ‘ஓ’ன்னு” (வைரமுத்து,2005)

என்கிறார் வைரமுத்து. மனிதனுடைய வாழ்க்கையில் தோல்வியான செயல்கள் அவனை அறியாமலே வருவதுண்டு. பல நேரங்களில் அவனுடன் உறையும் பிற மனிதர்களின் நடவடிக்கைகளினாலும் அணுகுழங்களினாலும் அவன் மனதுக்கு விருமிலாத நிலை ஏற்படுவதுண்டு.

இவ்விரண்டும் மனிதனுக்கு மனிதனே பிறழ்ச்சியாகி இயங்குவதால் ஏற்படும் தோல்வியாகவும் எதிராகவும் அமையும் நிலைகளாகும். சில நேரங்களில் தாங்க முடியாத துன்பம், இழப்பு, இறப்பு, மனநிலை, காலத்தின் கட்டாயம் போன்ற இயற்கையாய் நடப்பதன் பிறழ்ச்சிகள் மனித வாழ்வில் துயரங்களும் தோல்விகளும் தழுவிக் கொள்வன. காலங்காலமாக பண்பாட்டில் ஊறிய மாந்தர்கள் தோல்வியை எதிர்கொள்ள முடியாமல் வாழ வழியின்றி தவிப்பார்கள். அத்தோடு தொடர் தோல்வியால் அமைதியாகவோ, அதனை மறந்தோ அவர்களால் வாழ இயலாது என்ற கருத்தினைப் பாத்திரத்தின் வழியே தெளிவாக காட்டியுள்ளார் ஆசிரியர்.

## முடிவுரை

ஒரு புதினத்தின் வெற்றி பாத்திரப் படைப்பின் செறிவைப் பொருத்தே அமைகிறது. தாம் கண்ட மனிதர்களின் நிகழ்வுகளை வெளிக்காட்ட பொருத்தமான பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்துள்ளார் ஆசிரியர். பாத்திரங்களின் பல்வேறு பட்ட பண்பு இயல்புகளைப் புதினக் கதையின் சூழலுக்கேற்பப் படைத்துக் காட்டியுள்ளது வைரமுத்துவின் தனித்தன்மைக்குச் சான்றாகும். புதினத்தில் பங்கு கொள்ளும் பாத்திரங்கள் சமகால வாழ்வில் கண்டவர்களாகவே காண முடிகிறது. வைரமுத்துவின் பாத்திரங்கள் சில பொதுவான பண்புகள் காணப்பட்டாலும், ஒவ்வோர் இடத்திலும் சில தன்மைகள் நுட்பமான வேறுபாடுகள் இருப்பதை ஆய்வின் முடிவில் புலனாகிறது.

## References

Dhandayutham, (1977) A Study of Sociological Novels in Tamil

Geetha, K.V., (1979) Tamil Novels - A Study, Tanagam, Chennai

Gnanasambandham, A.C. (2016) Literary Arts, Pari Nilayam, Chennai

Muthiah, K. (1980) Character Creation in Jayakanthan's Novels, Muthu Meenal Publishing House, Chennai

Pichamuthu, N (2002) Criticism and Tamil Literary Principles, Shakti Bookstore, Chennai

Prathipa Rajagopalan, (2000) Fiction Literature A Study, p.83

Sampathkumar, P. (1988) Characters in M.V. Novels: A Review, Raj Gandhi Publishing House, Coimbatore

Thirumalai, M. (1997) Tamil Short Story Yesterday and Today (Part-II), Ainthinai Publishing House, Chennai

Vairamuthu, (2005) Kallikattu Itigasam, Thirumagal Nilayam, Chennai

Varadarasan, M. (2000) Literary Tradition, Pari Nilayam, Chennai

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License